1990 ஆகஸ்டு 22]

கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருக்குமானால், அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை குடிநீர் வடிகால் வாரியம் செய்து வருகிறது. குடிநீர் வடிகால் வாரியத்தில் ஆட்கள் இல்லை என்ற குறை ஏதும் இல்லை. அப்படி ஏதாவது குறிப்பாக இருக்குமானால், அதை மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவாரானால் உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு சிறப்புத் திட்டம்.

*1535 திரு. எஸ். எஸ். கருப்பசாமி : மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து கைத்தறி நெசவாளர்களையும் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களாக ஆக்கி, அவர்களுக்கு நிரந்தரப் பணி, பணிப் பாதுகாப்பு, குறைந்த பட்ச மாத ஊதியம் போனஸ், வருங்கால வைப்பு நிதி ஆகியவை உறுதி செய்யும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா!

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது கைத்தறிகளை கூட்டுறவுமயமாக்கினால், நூல் வழங்குதல், தள்ளுபடி வழங்குதல், நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி, உற்பத்திக்கு ஏற்ப கூலியின் அடிப்படையில் போனஸ் வழங்குதல் ஆகிய திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அது தவிர, நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அறிவித்துள்ளதுபோல நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் 3,000 வழங்கப்பட்டது. அது 10 ஆயிரம் ரூபாயாக இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. அது போல ஓடு போட்ட வீடுகளுக்குப் பதிலாக கான்கிரிட்—ஆல் அமைக்கப்படும் திட்டத்தின்கீழ் 2 ஆயிரம் வீடுகள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே உருவாக இருக்கிறது. தனியாக, புதிய நவீன ரகங்களை உற்பத்தி செய்கின்ற நெசவாளர்களுக்கு பழுதடைந்த தறிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மேற்படி சிறப்புத் திட்டங்கள் எல்லாம் தற்போது நடைமுறையில் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். கருப்பசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயுள்ள தனியார் நெசவு ஆலைகளில் வேலை செய்யும் நெசவாளர்கள் பெறுவது போல தமிழகத்திலே இயங்கும் தொழிலியல் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில்

உள்ள விற்பனையாளர்களுக்கு மற்றும் நெசவு தொடர்பான தொழிலாளர்களுக்கு நிரந்தரப்பணி, பணிப் பாதுகாப்பு, குறைந்த பட்ச மாத ஊதியம், போனஸ், வருங்கால வைப்பு நிதி ஆகியவை களை விரிவு செய்யும் சிறப்புத் திட்டத்திற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு கொடுக்கின்ற அனைத்து சலுகைகளும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெச வாளர்களுக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. எஸ். எஸ். கருப்பசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி துணிகள் தேக்கத்தை நீக்கவும், கைத்தறி துணிகள் விற்பனை பெருகவும், கைத்தறித் துணி விற் பனைக்கு பண்டிகை நாட்களுக்கு 20 விழுக்காடு கழிவுத் தொகைக் கொடுக்கப்படுகிறது. அத்துடன் கைத்தறி விற்பனைக்கு மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு 20 விழுக்காடு கழிவுத் தொகை, ரிபேட் வழங்கி, நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை கிடைக்க அரசு அவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

9-55 மணி

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்த துணிகளை விற்பனை செய்ய 20 சதவிகிதம் தள்ளுபடி மானியம் இந்த அரசு வருவதற்கு முன்னால் 30 நாட்களாக இருந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னர், மாண்புமிகு முதல மைச்சரவர்கள் நிதி நிலை அறிக்கையில் அறிவித்தது போல 90 நாட்கள் தள்ளுபடி மானியம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தள்ளுபடி பண்டிகை காலங்களில் மட்டுமல்லாமல், மாதந் தோறும் 1 முதல் 5 நாட்கள் வழங்குவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, சென்னை, கோவை, மதுரை போன்ற மாநகராட்சிகளிலே வாழ்கிற கைத்தறி நெசவாளர்களைப் பாதிக்கக்கூடிய வகையில், அந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கடன் தள்ளுபடி பொருந்தாது என்று உத்தரவு வந்திருப்பதாகக் கேள்வி ப்படுகிறேன். அதை மாற்றி மாநகராட்சிகளில் வாழும் கைத் தறி நெசவாளர்களும் அந்தத் பயனைப் பெறும் அளவில் இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் ஆய் வில் எடுத்துக் கொள்ளப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

1990 ஆகஸ்டு 22]

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டத்திலே கைத்தறி சங்கங்களிலே பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு மோசடி செய்யப்பட்டு, அதைப் பற்றி ஆய்வு செய்ய தனிக் குழு அமைக்கப்பட்டது. அந்த விசாரணை அடிப்படையில் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு **திரு. ச. தங்கவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அருப்புக்கோட்டையில் கடந்த காலத்தில் நடைபெற்ற அந்தத் தவறுகளுக்காக 15 பேர்கள் சிறைத் தண்டனை வரையில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்காக தனியாக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு பல்வேறு சங்கங்களில் கடந்த காலத்தில் நடந்த தவறுகளை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. முழுமையான அறிக்கை வந்த பிறகு அதைப் பற்றி இங்கே விவரங்களைத் தருகிறேன்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவு நெசவாளர்கள் சங்கங்களிலே உள்ள உறுப்பினர்களுக்கும், அதைப்போல கைத்தறி நெசவு வேலையில் ஈடுபட்டுள்ள அனைத்துக் கைத்தறித் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை அமலாக்க வேண்டுமென்று உத்தரவிட்டும், அந்தக் கூலி பல இடங்களில் அமலாகவில்லை என்பது அமைச்சரவர்களின் கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். கூட்டுறவு சங்கங்களின் பெரிய அதிகாரிகளே, இதை அமல் படுத்தினால் அந்தச் சங்கங்களை முறையாக நடத்த முடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்படுமென்று காரணம் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட காரணங்களைச் சொல்லி, அந்தச் சட்டத்தை அமல்படுத்துவதைத் தடுப்பது சரியல்ல. அதை நிறைவேற்ற அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. **தங்கவேலு:** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் விரைவில் ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐ.யு.டி.பி. திட்டத்தின்கீழ் கடனுதவி

*3555—**திரு. பி. வி. இராஜேந்திரன் :**
மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஐ.யு.டி.பி. திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடங்கள், திருமண மண்டபங்கள் கட்ட பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் கடனுதவி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்.